www.freetnbooks.com

T.

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2025

## வகுப்பு - 11

பதிவு எண் [ ] [ ] [ ] [ ] [ ] [ ]

கால அளவு: 3.00 மணி நேரம் | பொதுத்தமிழ் | மொத்த மதிப்பெண்கள்: 90

### பகுதி-I

அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 14×1=14

1) மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்த காலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது எனக் கூறியவர் ________.

அ) வால்ட் விட்மன்
ஆ) எர்னஸ்ட் காசிரர்
இ) ஆற்றூர் ரவிவர்மா
ஈ) பாப்லோ நெரூடா

2) மொழிமுதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.

அ) அன்னம், கிண்ணம்
ஆ) டமாரம், இங்ஙனம்
இ) ரூபாய், லட்சாதிபதி
ஈ) றெக்கை, அங்ஙனம்

3) மண்ணுக்கு வளம் சேர்ப்பன ________.

அ) மண்புழு
ஆ) ஊடுபயிர்
இ) இயற்கை உரங்கள்
ஈ) இவை மூன்றும்

4) கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை ________.

அ) நேரடிப் பொருட்கள் ஆ) மதிப்புக் கூட்டுப் பொருட்கள்

அ) அ மட்டும் சரி
ஆ) ஆ மட்டும் சரி
இ) இரண்டும் சரி
ஈ) அ-சரி, ஆ-தவறு

5) துன்பப்படுபவர் ________.

அ) தீக்காயம்பட்டவர்
ஆ) தீயினால் சுட்டவர்
இ) பொருளைக் காக்காதவர்
ஈ) நாவைக் காக்காதவர்

6) பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் ________.

அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்
ஆ) பகுதி, இடைநிலை, சாரியை
இ) பகுதி, சந்தி, விகாரம்
ஈ) பகுதி, விகுதி

7) 'வரை' எனும் சொல் எதனைக் குறிக்கிறது?

அ) கடல் ஆ) வயல் இ) மரம் ஈ) மலை

8) "விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் - ஒரு
வினாவாய் நீயே நிற்கின்றாய்" - என்றுரைத்தவர் ________.

அ) பிரமிள்
ஆ) அழகிய பெரியவன்
இ) அப்துல் ரகுமான்
ஈ) இரா. மீனாட்சி

9) ஏடு, சுவடி, பொத்தகம் முதலிய சொற்கள் தரும் பொருள் ________.

அ) நூல் ஆ) ஓலைக்கற்றை இ) எழுத்தாணி ஈ) தாள்

10) ஆனந்தரங்களுக்குத் தொடர்பில்லாத குறிப்பைத் தேர்க.

அ) மொழிபெயர்ப்பாளர்
ஆ) இந்தியாவின் பெப்பிசு
இ) பிரெஞ்சு ஆளுநரின் தலைமை மொழிபெயர்ப்பாளர்
ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



11) 'அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்' - யார் யாரிடம் கூறியது?

அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்

இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

12) அதிசய மலரின் புன்னகை உணர்த்துவது ______.

அ) நம்பிக்கை ஆ) பெருமிதம் இ) புகழ் ஈ) அச்சம்

13) தமிழ் உரைநடையின் தந்தை என அழைக்கப்படுபவர்

அ) உ.வே.சா ஆ) ஆறுமுக நாவலர்

இ) பரிதிமாற்கலைஞர் ஈ) பூதந்தேவனார்

14) தமிழ்நாடு அரசு பாரதிதாசன் பெயரால் பல்கலைக்கழகம் நிறுவிய இடம்

அ) திருச்சி ஆ) மதுரை

இ) கோயம்புத்தூர் ஈ) திருநெல்வேலி

## பகுதி-II

### பிரிவு-1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி: 3×2=6

15) உழுவோர்க்கெல்லாம் விழுமிய வேந்து நீ - தொடரின் பொருள் யாது?

16) சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?

17) உழைப்பாளர்களின் தோள்வலிமையால் விளைந்தன யாவை?

18) "ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்த நல்
தீன் எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்'' - இப்பாடலடியில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?

### பிரிவு-2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி: 2×2=4

19) ஐந்து வேளாண்மை மந்திரங்கள் யாவை?

20) மதீனா நகரம் மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

21) 'நாழிக்குள் திணிக்கும் மருந்து போல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

### பிரிவு-3

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி: 7×2=14

22) பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
தேர்வெழுத வேகமாய் போங்க. நேரங்கழிச்சிப் போனாப் பதட்டமாயிரும்.

23) பகுபத உறுப்பிலக்கணம் தருக.
பயின்றார், தொடங்கினார்

24) புணர்ச்சி விதி தருக : கருங்கல், மண்ணுடை.

25) ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக.
Translator, Culture

26) நிறுத்தற் குறியீடுகளின் வகைகளைக் கூறுக.

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



27) உயிரீறு, மெய்யீறு - விளக்குக.

28) வல்லின மெய்களை இட்டும், நீக்கியும் எழுதுக.

கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்

29) தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும்.

(வினாத் தொடராக்குக.)

30) சொற்களைப் பிரித்தும், சேர்த்தும் தொடரமைக்க : அறிவில்லாதவன்.

## பகுதி-III

### பிரிவு-1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி: **2×4=8**

31) சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

32) தமிழ்ப் பண்பாட்டின் ஓர் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.

33) "உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

34) இன்குலாப் "உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்" எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.

### பிரிவு-2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி: **2×4=8**

35) கவிதை ஒரு படைப்புச் செயல்பாடு என்பதை விளக்குக.

36) சமணப்பள்ளிகளும், பெண்கல்வியும் குறிப்பு வரைக.

37) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை விளக்குக.

38) ஜீவாவின் பேச்சு நடை குறித்து சுந்தரராமசாமி கூறுவன யாவை?

### பிரிவு-3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி: **3×4=12**

39) "மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்

பெருந்தகை யான்கண் படின்" - இக்குறப்பாவ ) பயின்றுவரும் அணியை விளக்குக.

(அல்லது)

பாடாண்திணையைச் சான்றுடன் விளக்குக.

40) இலக்கிய நயம் பாராட்டுக: (மையக் கருத்துடன், மூன்று நயங்களை எழுதுக.)

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தார் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



41) தமிழாக்கம் தருக:

அ) Work while you work and play while you play.

ஆ) Culture does not make people. People make culture.

இ) Roads made for journeys not destinations.

ஈ) A picture is worth a thousand words.

42) பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.

அ) வாய்மையே வெல்லும் (அல்லது) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

43) இயற்கை (அல்லது) அன்னை என்ற தலைப்பில் கவிதை எழுதுக.

## பகுதி-IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி: **3×6=18**

44) காவடிச்சிந்து ஒரு வழிநடைப்பாடல் - இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல்வழி விளக்குக.

**(அல்லது)**

மருந்து, மருத்துவர், மருத்துவம் குறித்து திருக்குறள் தரும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

45) பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை எழுதுக.

**(அல்லது)**

சுந்தரராமசாமியின் 'காற்றில் கலந்த பேரோசை' என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

46) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து, நீவிர் அறிந்தனவற்றைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

நர்த்தகி நடராஜின் நேர்காணல் வழி அறிந்தவற்றைத் தொகுத்துக் கட்டுரை எழுதுக.

## பகுதி-V

47) அடிபிறழாமல் எழுதுக: **4+2=6**

அ) "சிற்றூரும் வரப்பெடுத்த....." எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடலை எழுதுக.

ஆ) "...... செயின்" - என முடியும் குறட்பாவை எழுதுக.

- - - - -

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner